செ.வெ.எண்:52 நாள்:21.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உலக மீன்வள தினத்தை முன்னிட்டு மீனவர்களுக்கு அக்ரைப்பேட்டை மீன்பிடி துறைமுகத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பல்வேறு போட்களில் வெற்றி பெற்ற மீனவர்களுக்கு பரிசுகளையும் மற்றும் O.N.G.C நிறுவனத்தின் மூலம் மீனவர்களுக்கு G.P.S கருவிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப. அவர்கள் இன்று (21.11.2021) வழங்கினார். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழக தலைவர் திரு.ந.கௌதமன், ஆகியோர் உடன் உள்ளனர்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உலக மீன்வள தினத்தை முன்னிட்டு மீனவர்களுக்கு அக்ரைப்பேட்டை மீன்பிடிதுறைமுகத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பல்வேறு போட்களில் வெற்றி பெற்ற மீனவர்களுக்கு பரிசுகளையும் மற்றும் O.N.G.C நிறுவனத்தின் மூலம் மீனவர்களுக்கு G.P.S கருவிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப. அவர்கள் இன்று (21.11.2021) வழங்கினார். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழக தலைவர் திரு.ந.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.மாலி, O.N.G.C மேலாளர் (சொத்து) திரு.அனுராதத் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

உலகின் மிக ஆபத்தான தொழில்களில் ஒன்றான மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் வாழ்வையும் மற்றும் மீன்வளத்தினை மேம்படுத்தவும் ஆண்டுதோறும் நவம்பர்-21-ம் தேதி உலக மீன்வள தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. மீன்வளமானது புரதம் மிகுந்த உணவு வழங்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர்களின் மேம்பாட்டினை உயர்த்திடவும், மீன்பிடிப்பு, மீன்வளர்ப்பு மற்றும் மீன்வளம் சார்ந்த தொழில்களை மேம்படுத்திடவும், கடலோரப்பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கவும், மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்து அவர்களது வாழ்வு மகிழ்ச்சியடையவும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும் மீன்வளத்துறை வாயிலாக பல்வேறு முன்னோடி வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2021-ஆம் ஆண்டு உலக மீன்வள தினத்தை முன்னிட்டு மீனவர்களுக்கு கடலில் மீன்பிடிக்கும்போது ஏற்படும் விபத்துகள் மற்றும் உடல்நலக்குறைவு ஆகியவற்றிலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள ஏதுவாக முதலுதவி பயிற்சி மருத்துவ குழு மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புதுறை கொண்டு நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் மீனவர்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு தடுப்பூசி போடும் நிகழ்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து மீனவர்களுக்கு நீச்சல் போட்டி மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. மீனவர்களுக்கு GPS கருவிகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், திரு.கோ.ஜெயராஜ்,, குழும பொதுமேலாளர் திரு.மாறன் அவர்கள், அக்கரைபேட்டை ஊராட்சிமன்ற தலைவர் அலியாநிதி மனோகரன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த மீனவ பஞ்சாயத்து, கூட்டுறவு சங்க தலைவர்கள் மற்றும் மீனவர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**